# பொது மக்களின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படவிருக்கும் நீங்கள், கஞ்சா, ஹெரோயின் உற்பட ஏனைய போதைப்பொருள் பாவனையைக் குறைத்து நாட்டை துரித அபிவிருத்தியை நோக்கி எவ்வாறு கொண்டு செல்லலாம்?



இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடக் காத்திருக்கும் உங்களுக்கும், உங்களது கட்சிக்கும் கஞ்சா, ஹெரோயின் உற்பட் ஏனைய போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளப்போகின்றீர்கள் என்பதனை பொது மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக இப்போது களம் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

## கஞ்சா பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியவை

Cannabis, Marjuana, weed, kg, கஞ்சா பாவனையானது ஏற்கனவே உளநோய் இருப்பின் அதனை அதிகரிப்பதோடு புதிதாக உளநோய்களை ஏற்படுத்துவதற்கு அதிக வாய்ப்பாகவும் அமைந்து விடுகிறது என சர்வதேச ரீதியாக நிபுணர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

### கஞ்சா பாவனையினால் ஏற்படும் உளநோய்கள்

1. Cannabis Induced Psychosis
2. சைகோசியா Schizophrenia
3. Bipolar Disorder
4. Depression

### அது தவிர,

- மலர்ச்சியற்ற தோற்றம்,
- இளமைப்பருவம் துரித கதியில் மங்கிப் போதல்,
- பாலியல் பலவீனம் ஏற்படுதல்,
- புற்று நோய்,
- இதய நோய்,
- பக்கவாதம் போன்ற நோய்கள் ஏற்படுதல்



கஞ்சாவினால் மேற்குறிப்பிட்ட பாதிப்புகள் ஏற்பட்டாலும் அவற்றை மறைத்து பொய்யான கருத்துகளை மக்கள் மயப்படுத்துவதற்கு கும்பல்கள் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவர்கள் கூறும் பொய்யான கருத்துக்கள் பின்வருமாறு

ஆக்கபூர்வமான ஆற்றல்கள் அதிகரிக்கும், உளத் திருப்தி அதிகரிக்கும், சுகாதாரத்திற்கு எந்தவிதத்திலும் பாதிப்பு இல்லை. பக்குவமடைந்தவர்களாக மாறுவார்கள் போன்ற பொய்களை மக்கள் மத்தியில் திணிக்க முற்படுகின்றனர் என்பதனை அடிக்கடி எங்களால் பார்க்க முடிகிறது.

மோசடி வியாபாரிகள் இவ்வாறான பொய்க் கருத்துக்களை மக்கள் மயமாக்குவதற்கு சில ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், சுதேச வைத்தியர் ஆகியோரின் உதவிகளை பெற்று சிறுவர்கள், இளைஞர்கள், பொதுமக்களை ஏமாற்ற நடவடிக்கை எடுக்கின்றனர்.

## கஞ்சாவை சட்டரீதியாக ஆக்குவதற்கு பின்புலத்தில் செயற்படும் மர்மம்

இன்று கஞ்சாப் பாவனையை சட்டரீதியாக மாற்றுவதற்கு இலங்கை உற்பட சர்வதேச ரீதியில் மிகப் பாரிய பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்பிரச்சார நடவடிக்கைகளுக்கு உந்து சக்தியாக சில குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. அவர்கள் அதற்காக,

- பேஸ்புக் உற்பட ஏனைய சமூக வலைத்தளங்களைப் பாவிக்கின்றனர்.
- சமூகத்தில் புதிய கலந்துரையாடல்கள், தர்கங்களை ஏற்படத்த முயற்சிக்கின்றனர்.
- பத்திரிகைகளில் ஆக்கங்கள் கட்டுரைகளை பிரசுரிக்கின்றனர்.
- கஞ்சா தொடர்பான புத்தகங்களை வெளியிடல்
- வெளியிட்ட புத்தகங்களை அரசியல்வாதிகளுக்கு அன்பளிப்பு செய்தல்
- கஞ்சா தொடர்பாகக் கதைப்பதற்கு ஊடகங்களில் நேரம் ஒதுக்குதல்.



அண்மைக்காலத்தில் சர்வதேச ரீதியாக சட்டரீதியாக்கப்பட்டு வரும் கஞ்சா வியாபாரத்தில் பெரும் பகுதியை பல்தேசிய புகையிலை நிறுவனம் விலைக்கு வாங்கியுள்ள அதேசமயம் கஞ்சாவை சட்டரீயாக்க வேண்டும் என மேற்கொள்ளும் பிரச்சார நடவடிக்கைகளுக்கு சிகரட் நிறுவனம் பணம் செலவளிக்கின்றனர் என்ற விடயம் அம்பலமாகியுள்ளது. அதில் பிரித்தானியா, அமெரிக்கா புகையிலை நிறுவனம் மற்றும் மால்புரோ நிறுவனம் முன்னிலை பெறுகின்றன.

## கஞ்சாவை பிரபலயப்படுத்தும் திட்டமிட்ட சதியிலிருந்து நாட்டையும் பொதுமக்களையும் காப்பாற்றிக் கொள்ள மக்களின் பிரதிநிதி என்ற வகையில் எவ்வாறு செயற்பட முடியும்?

கஞ்சாவை சட்டரீதியாக்கும் சதியிலிருந்து நாட்டை காப்பாற்றுவதற்கு அனைத்து சந்தர்ப்பங்களிலும் முன்னிற்றல்

தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களைப் பலப்படுத்தி அமுல்படுத்தல்

கஞ்சாவை விளம்பரமாக்கும் பல்வேறு ஊடகங்களுக்கெதிராக நடவடிக்கை எடுத்தல், தேவையான புதிய சட்டங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல்.

தற்போது கஞ்சா பாவிப்பவர்களை அதிலிருந்து விடுதலையாக்குவதற்கு முறையான உளநல ஆலோசனைக்கு அல்லது புணர்வாழ்வு மையங்களுக்கு அனுப்புதல்.

கஞ்சா பாவனையில் உள்ள பாதிப்புக்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுவதற்கு முறையான செயற்திட்டங்களை மேற்கொள்ளல்.

தற்போது கஞ்சா வியாபாரம் தொடர்பாக வெளிவரும் உண்மைகளை மறைக்காமல் மக்கள் மத்தியில் கொண்டுசேர்த்தல்.

## ஹெரோயின் பாவனைக்குப் புதிதாகப் பழகுபவர்களைத் தடுப்பதற்கும், பாவிப்போர்களை அதிலிருந்து விடுதலையாக்குவதற்கும் ஏன் செயற்பட வேண்டும்

### ஹெரோயின் என்பது,

பாவிக்கும் நபரை சோர்வாக்கும் ஒரு போதைப் பொருளாகும். ஹெரோயினில் அடங்கியுள்ள இரசானம் உடலில் அசௌகரிய நிலையை ஏற்படுத்தி உடலை வாட்டி வதைக்கக் கூடிய ஒன்றாகும் என விஞ்ஞானரீதியாக நிருபிக்கப்பட்டுள்ளது.

ஹெரோயின் பாவனையைக் குறைப்பதற்கு மக்கள் பிரதிநிதி என்ற வகையில் உங்களது பொறுப்பு....

01. தற்போது ஹெரோயின் மோசடி வியாபாரம் தொடர்பாக வெளிவரும் உண்மைகளை மறைக்காமல் மக்கள் மயப்படுத்தல்.

02. தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களைப் பலப்படுத்தி நடைமுறைப்படுத்தல்.

03.நிறம்,கட்சி, வேறுபாடு இன்றி ஹெரோயின் மோசடி வியாபாரத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகளை அம்பலப்படுத்தல்

04. தற்போது ஹெரோயின் பாவனையில் ஈடுபடுபவர்களை அதிலிருந்து விடுதலையாக்குவதற்கு விஞ்ஞானரீதியான சிகிச்சை முறைகளுக்கு உற்படுத்தல்.

05.புணர்வாழ்வு மையங்களில் தனி நபர் ஆழுமைகளை விருத்தி செய்து தொழில் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## கஞ்சா ஹெரோயின் உற்பட ஏனைய போதைப் பொருள் பாவனையைக் குறைப்பதன் மூலம்

1. பொருளாதாரம் வலுவடையும்

2. போதைப் பொருள் பாவனையினால் ஏற்படும் நோய்களுக்கு சுகாதார அமைச்சினால் ஒதுக்கப்படும் நிதி குறைவடையும்.

3. வலுவான கூலிப்படை உருவாகும்.

4. சுகாதார ரீதியில் முன்னேற்றம் கண்ட இலங்கையர்கள் உருவாகுதல்

மேற்குறிப்பிட்ட ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தி இலங்கையர்களை ஹெரோயின் மோசடி வியாபாரிகளின் பிடியில் இருந்து காப்பாற்றி,சுகவாழ்வான சமூகமொன்றை உறுவாக்குவது உமது கரங்களிலே தங்கியுள்ளது.



**இம்முறைப் பொதுத் தேர்தலில் அபேட்சகராகப் போட்டியிடும் நீங்கள், உமது அரசியல் கட்சி கஞ்சா, ஹெரோயின் உற்பட ஏனைய போதைப் பொருட்களை கட்டுப்படுத்துவதற்கு எவ்வாறான செயற்திட்டங்களை மேற்கொள்ளப்போகின்றீர்கள் என்பதனை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியமைக்கான பிரதான காரணம் ,**

**மேற்குறிப்பிட்ட காரணங்களை மையமாக வைத்து தீர்மானமெடுக்கும் குறிப்பிட்ட அளவானவர்கள், இது தொடர்பில் உமது நிலைப்பாடு என்ன என்பதனை அவதானித்துக்கொண்டு இருப்பதனாலாகும்.**


http://www.thelancet.com/journals/lanpsy/article/PIIS2215-0366(19)30048-3/fulltext

http://learnaboutsam.org/we-won-the-flight-in-minnesota/

http://www.forbes.com/sites/sarabrittanysomerset/2018/12/04/possible-big-tobacco-deal-causes-cronos-stock-to-soar/#361528a04891

http://learnaboutsam.org/colorado-2/

http://www.medscape.com/viewarticle/910863?nild=129026_2163&src=WNL_mdplsnews_190329_mscpedit_gast&uacv=215020CT&spon=20&impID=1922219&faf=1



Alcohol and Drug Information Centre (ADIC) - Sri Lanka
No. 40/18, Park Road, Colombo 05, Sri Lanka
Tel: +94 11 2584416 Fax: +94 112508484
http://adicsrilanka.org